செ.வெ.எண்.73/2018 நாள் : 11.02.2018

# காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IV தேர்வினை 80 ஆயிரத்து 607 பேர் தேர்வு எழுதினர்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IV-க்கான தேர்வுகள் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தேர்வு நடைபெறும் மையமான வாலாஜாபாத் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ராசி பெறியியல் கல்லூரி, வள்ளுவர்குருகுலம் பள்ளிகளில் தேர்வு நடைபெறுவதை ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 170 தேர்வு மையங்களில் 298 தேர்வு அறைகளில் தேர்வு நடைபெற்றது. காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதிலும் 95 ஆயிரத்து 707 தேர்வாளர்கள் இத்தேர்வினை எழுத விண்ணப்பித்தனர். காஞ்சிபுரம் வட்டத்தில் 27 ஆயிரத்து 50 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 23 ஆயிரத்து 800 பேர் தேர்வு எழுதினர். 3 ஆயரத்து 250 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. வாலாஜாபாத் வட்டத்தில் 4 ஆயிரத்து 271 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 3 ஆயிரத்து 832 பேர் தேர்வு எழுதினர். 439 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை உத்திரமேரூர் வட்டத்தில் 3 ஆயிரத்து 385 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 3 ஆயிரத்து 047 பேர் தேர்வு எழுதினர். 338 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. திருப்பெரும்புத்தூர் வட்டத்தில் 3 ஆயிரத்து 264 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 2 ஆயிரத்து 705 பேர் தேர்வு எழுதினர். 559 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. செங்கல்பட்டு வட்டத்தில் 12 ஆயிரத்து 124 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 9 ஆயிரத்து 962 பேர் தேர்வு எழுதினர். 2 ஆயிரத்து 162 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. திருக்கழுக்குன்றம் வட்டத்தில் 4 ஆயிரத்து 418 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 3 ஆயிரத்து 748 பேர் தேர்வு எழுதினர். 670 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. திருப்போரூர் வட்டத்தில் 2 ஆயிரத்து 55 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 1740 பேர் தேர்வு எழுதினர். 315 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. மதுராந்தகம் வட்டத்தில் 5 ஆயிரத்து 891 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 5 ஆயிரத்து 80 பேர் தேர்வு எழுதினர். 811 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. செய்யூர் வட்டத்தில் 2 ஆயிரத்து 71 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 1721 பேர் தேர்வு எழுதினர். 350 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. தாம்பரம் வட்டத்தில் 20 ஆயிரத்து 658 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 16 ஆயிரத்து 426 பேர் தேர்வு எழுதினர். 4 ஆயிரத்து 232 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. பல்லாவரம் வட்டத்தில் 6 ஆயிரத்து 677 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 5 ஆயிரத்து 429 பேர் தேர்வு எழுதினர். ஆயிரத்து 248 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. ஆலந்தூர் வட்டத்தில் ஆயிரத்து 432 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, ஆயிரத்து 190 பேர் தேர்வு எழுதினர். 242 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. சோழிங்கநல்லூர் வட்டத்தில் 2 ஆயிரத்து 411 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, ஆயிரத்து 927 பேர் தேர்வு எழுதினர். 484 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை. ஆக மொத்தம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் விண்ணப்பித்த 95 ஆயிரத்து 707 பேர் தேர்வு எழுத விண்ணப்பித்து, 80 ஆயிரத்து 607 பேர் தேர்வு எழுதினர். 15 ஆயிரத்து 100 பேர் தேர்வுக்கு வருகைபுரியவில்லை என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தமது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மேற்படி தேர்விற்காக 45 சுற்று குழுக்கள், 21 பறக்கும் படைகள் நியமிக்கப்பட்டது.

செய்தி வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞசிபுரம்